## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>

**அசல் வழக்கு எண்.** 61/2022

**வாக்குமூலம்.பி.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாகுல் ஹமீது | தொழில் | |
| த/பெ. | ஜலாலுதீன் | வயது | / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 17.09.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

ஏற்கனவே பி.வா.சா.ஆ.1 ஆவணம் வா.சா.1 குறுக்கு விசாரணையின் போது குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகளின் தந்தை சம்சுதீன் மற்றும் அவரது சகோதரர்கள் பெயரில் உள்ள தாவா சொத்துக்கும் இதர சொத்துக்களுக்கும் ஆன செட்டில்மெண்ட் பட்டா அசல் தாக்கல் செய்கிறேன் அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கான மேற்படி சம்சுதீன் பெயரிலான நிலவுடைமை மேம்பாட்டுத்திட்ட பட்டா அசல் தாக்கல் செய்கிறேன் அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.11.1994 தேதிய வெள்ளைச்சாமி என்பவர் ரவிசுப்பிரமணியன் என்பவருக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரத்தின் இணையதள பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யாமல் இணையதள பதிவிறக்க நகலை தாக்கல் செய்யமுடியாது என்றும் மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்துக்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தம் இல்லை என்றும் வாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.03.2010ஆம் தேதி சம்சுதீன் என்பவர் தாவா சொத்துக்களை பொறுத்தும் இதர சொத்துக்களை பொறுத்தும் பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்தி தானசெட்டில்மெண்ட் பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.06.2011 தேதிய வழக்கு சொத்திற்கும் இதர சொத்திற்கும் சம்சுதீன் பெயரில் இருந்து பிரதிவாதிகள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்ட உத்தரவு அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1422 முதல் 1431 பசலி ஆண்டிற்கான வழக்கு சொத்திற்கான அடங்கல் கணக்குகல் எண்ணிக்கை 14 தாக்கல் செய்கிறேன் அது பி.வா.சா.ஆ.7 வரிசை எண்ணிக்கை 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலஎண் 338 க்கான புலப்படம் இணையவழி நகல் தாக்கல்

செய்கிறேன் அது பி.வா.சா.ஆ–8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதிகளின் அதிகார முகவர் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு எண் 1789/2020 மனுவில் கடந்த 26.07.2021ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை உத்தரவு இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**